R.No.11186/E4/2016/S3

Office of the Director of Public Health
and Preventive Medicine, Chennai-6
Dated: 20.03.2019

Sub: Establishment - Public Health - Tamil Nadu Ministerial Service - Thiru S.Vigneswar S/o (late) Thiru S.Selvaraj - Appointed as Typist on Compassionate Grounds - Regularisation of Services - Ordered - Copy Communicated - Regarding.

Ref: 1. G.O.(2D) No.57, Health and Family Welfare (AB-1) Department dated: 13.03.2019.

*******

A copy of the Government Order cited is enclosed herewith for taking necessary action.

S.THAMARAISELVAM
Joint Director (Administration)

To
S6 Seat of E4 Section of this office.
Copy to:
Thiru S.Vigneswar ,Typist of this office
An Original Copy of the Government Order cited intended to him along with the following certificated are enclosed herewith.

1. Community Certificate
2. SSLC Mark list – Reg No.854787
   HSC Mark list – Reg No.752758
3. Typewriting Certificate Englilsh (Junior & Senior Grade)
4. Typewriting certificate Tamil (Junior & Senior Grade)
5. Transfer certificate

Stock File/Spare

//true copy//forwarded//by order//

Superintendent.
25/3/19

22/03/19

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.செ.விக்னேஷ்வர், த/பெ.(அமரர்) திரு.சு.செல்வராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை**

அரசாணை (2ப) எண்.57

நாள் 13.03.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி, மாசி – 29

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.11186/படதொ.4/2016/ இரு.3, நாள்.26.04.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018

*****

**ஆணை:**

திரு.சு.செல்வராஜ் என்பவர், சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வரும்போது 09.06.2014 அன்று காலமானார். மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.செ.விக்னேஷ்வர் என்பவர், 03.08.1977 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.560–இல் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததன் பேரில், கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டு 07.07.2017 அன்று முற்பகல் சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இணைந்தார் என பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்து, மேற்படி தனியரின் பணியினை, அவர் வகிக்கும் தற்காலிக தட்டச்சர் பதவியில் பணியில் இணைந்த நாளான 07.07.2017 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்துதல்களின்படி தனியரின் அனைத்து சான்றிதழ்களையும் ஆய்வு செய்த பின், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.செ.விக்னேஷ்வர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் தட்டச்சராக பணியில் சேர்ந்த நாளான 07.07.2017 அன்று முற்பகல் முதல்

-2-

தட்டச்சர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.13369/க்யூ1/2018-1, நாள் 31.07.2018 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.25432/ஜி2/2018, நாள் 09.08.2018 ஆகியவற்றின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்,**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை 600 006.
தனியர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை – 600 006. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை 600 018 / 600 035.
சம்பளக் கணக்கு அலுவர் (தெற்கு), சென்னை – 600 0035.

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (துகவு பிரிவு) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/3/19
பிரிவு அலுவலர்

V.S
14.3.19